உள்ளடக்கப் பட்டியல்


**1. அறிமுகம் 3**

1.1. SULUR GK ASTRO APP பற்றிய அறிமுகம் 3

**2. பாவங்களுக்கான கிரக தொடர்பு 4**

**3. பயன்படுத்த தேவையானவைகள் (System Requirements) 7**

3.1. இயங்கும் தளம் (Operating System) 7

3.2. இணைய இணைப்பு (Internet Connectivity) 7

3.3. சாதன விவரக்குறிப்புகள் (Device Specifications) 7

3.4. தேவையான அனுமதிகள் (Permissions Required) 7

**4. தொடங்குதல் 8**

4.1. Sulur GK Softwer நிறுவுதல் (Softwer Install) 8

4.2. உள் நுழைதல் (Enter) 8

**5. முகப்புத்திரை கண்ணோட்டம் (Home Screen) 10**

5.1. ஆப் பார் அமைப்பு (App Bar) 10

**6. நிறுவுனர் அறிமுகம் 11**

6.1. சேமிக்கப்பட்ட ஜாதகங்கள் (Saved Records) 11

6.2. சேமிக்கப்பட்ட PDF-கள் 12

6.3. நகர் தேடல் 13

6.4. பேச்சை உரையாக மாற்றுதல் (Speech to Text) 14

6.5. கூடுதல் வசதிகள் 14

6.6. தொடர்பு விவரங்கள் (Contacts) 15

6.7. அமைப்புகள் (Settings) 15

6.8. அயனாம்ச தேர்வு (Ayanamsa Selection) 16

6.9. இடம் 18

6.10. PDF Settings 18

7. Main Form (Screen Shot) 19

7.1. அடிப்படை ஜாதக விவரங்கள் 20

8. கிரக பாதசார அட்டவணை 22

9. ராசி 23

9.1 ராசி மற்றும் நவாம்ச சக்கரங்கள் 23

9.2. சிறப்பம்சங்கள் 24

9.3. தசாபுத்தி விவரங்கள் 25

9.4. தசாபுத்தி அந்தர அட்டவணை 26

9.5. கோச்சார சக்கரம் 27

10. SULUR GK கோட்பாடுகள் அறிமுகம் 28

10.1. ராசிக்கட்டம் கோச்சார கிரகம் 29

10.2. பரிவர்த்தனை இருந்தால் பரிவர்த்தனை கிரகங்களை அட்டவணையாக காட்டும் 30

10.3. பரிவர்த்தனை முன் 30

10.4. பரிவர்த்தனை பின் 31

11. பாவம் நாடி கிரக தொடர்பு விளக்கம் 32

11.1. கிரகம் 33

12. சேர்க்கைகள் 36

13. விம்ஷோத்திரி தசாபுத்தி அந்தரம் அட்டவணை 38

14. பார்வைகள் 39

15. கோச்சாரம் 41

16. சந்திர நாடி தேதி 43

17. கோச்சார ராசிக் கட்டம் 43

# 1. அறிமுகம்

## 1.1. SULUR GK ASTRO APP பற்றி அறிமுகம்

**SULUR GK ASTRO** நிறுவனர் சூலூர் திரு.எஸ்.கோபாலகிருஷ்ணன் அவர்களால் இந்த Software வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் அனைவரையும் வரவேற்கிறோம்.

SOFTWARE-ல் பிறந்த தேதி, மாதம், வருடம், நேரம், பிறந்த ஊர் பதிவு செய்து (Submit) செய்யவும். ஜாதகம் திரையில் தோன்றும் இதில் பஞ்சாங்க விபரங்களை பார்த்துக்கொள்ளலாம். ராசி, நவாம்சம், கிரக பாத சாரங்களை டிகிரி (Degree) சுத்தமாக பார்க்கும் வசதி உண்டு. திசா புத்தி அட்டவணை பார்த்துக் கொள்ளலாம், அன்றைய கோச்சாரமும் பார்த்துக் கொள்ளலாம்.

**G.K.** என்ற **OPTION BUTTON CLICK** -ஐ செய்தவுடன் இராசி கட்டமும் அதற்கு வெளியில் அன்றய கோட்சார கிரக நிலைகளையும் பாகைவாரியாக பார்க்கும் வசதியும் உண்டு.

இராசி கட்டத்திற்கும் வெளியில் உள்ள கோட்சார கிரகத்திற்கும் PLACIDUS அடிப்படையில் 12 பாவ புள்ளிகளை பார்க்கும் வசதி கொடுக்கப்பட்டுள்ளது. **SULUR GK SYSTEM** கோட்பாட்டின்படி நாடி கிரக தொடர்புகளுக்கு ஒரு அட்டவனையும், 12 பாவங்களுக்கு, கிரக தொடர்பு (1,5,7,9) தனி அட்டவனையும் கொடுக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் பர்சன்டேஜ் (PERCENTAGE) அடிப்படையில் பார்க்கும் வசதியும் உண்டு.

பரிவர்த்தனைக்கு முன்பு, பின்பு உள்ள கிரக தொடர்புகளை நாடி அட்டவணை மற்றும் பாவ அட்டவணையிலும் பார்த்துக் கொள்ளலாம். திசா, புத்தி, அந்திரங்கள் பார்க்கும் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

கோட்சார கிரகங்கள் பிறந்த கால கிரகங்களை தொடர்புகொள்ளும் அட்டவணையும், கோட்சார கிரகங்கள் பிறந்த கால 12 பாவங்களை தொடர்புகொள்ளும் அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளது.

சூலூர் GK கோட்பாடு என்பது 1,5,7,9 மற்றும் கிரக பார்வைகளை உள்ளடக்கியது.

ஒரு கிரகம் நின்ற ராசியில் அது நின்ற பாகையில் இருந்து 1,5,7,9 ராசியில் உள்ள கிரகங்களை பாகை வாரியாக தொடர்புகொள்கிறது.

ஒரு கிரகத்தை செவ்வாய் சனி பார்வையால் தொடர்புகொண்டால் அதையும் கிரக தொடர்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இவை அனைத்தும் நாடி கிரக தொடர்பு அட்டவணையில் பார்த்துக்கொள்ளலாம்.

## 2. 12 பாவங்களுக்கான கிரக தொடர்பு

1 பாவத்திற்கு 1,5,7,9 ஆம் பாவங்களில் உள்ள கிரகங்கள் பாகை வாரியாக பாவத்தை தொடர்புகொள்ளும்.

ஒரு பாவத்தை சனி, செவ்வாய் பார்த்தாலும் அதையும் கிரக தொடர்பாக எடுத்துக்கொள்ளபடுகிறது.

இதே விதிதான் கோச்சார அட்டவணைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. Percentage என்பது ஒரு கிரகம் நின்ற பாகைக்கும் தொடர்புகொள்ளும் கிகரம் நின்ற பாகைக்கும் உள்ள இடைவெளியே Percentage நாடி அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளது.

12 பாவபுள்ளிக்கும் (1,5,7,9 என்கிற கோட்பாட்டின்படி) தொடர்புகொள்ளும் கோளின் பாகைக்கும் உள்ள இடைவெளியே Percentage ஆக பாவ அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. செவ்வாய் சனி பார்வையும் எடுத்துக்கொள்ளவும்.

**SULUR GK** கோட்பாடு என்பது பாரம்பரிய முறையில் இருந்தும், பிருகு நந்தி நாடியின் தந்தை பெங்களூர் **திரு.R.G.ராவ்** அவர்களின் அடிப்படையில் இருந்து சற்று சில கோட்பாடுகளை மேன்படுத்தி அதற்கு **SULUR GK ASTRO** என்ற பெயரில் கோட்பாடுகளை உறுவாக்கியுள்ளேன்.

- தென் இந்தியா மற்றும் வட இந்தியா முறையில் ராசி மற்றும் நவாம்ச கட்டங்கள் உள்ளன.
- பாவ தொடர்பு அட்டவணை கிரக தொடர்பு அட்டவணை பலன் பார்க்க மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- கோட்சார சந்திரன் பிறந்தகால கிரகங்களை தொடர்பு கொள்ளும் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.
- ஒரு பக்க ஜாதகம் மற்றும் தேவையான பக்கத்தை PDF ஆக மாற்றிக்கொள்ளலாம்.

- உள்ளமைக்கப்பட்ட உரை-க்கு-உரை (Voice to Text) குறிப்புகள் பிரிவு
- வாடிக்கையாளர் தேவைக்கேற்ப மாற்றக்கூடிய அமைப்பு (Settings)ல் கொடுக்கப்பட்டுள்ளது

இவையனைத்தும் PDF ஆகவும் மற்றும் PRINT OUT ஆக எடுத்துக்கொள்ளலாம். 40 இலட்சம் ஊர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. இது போன்ற இன்னும் சிறப்பம்சங்கள் இந்த SOFTWARE-ல் உண்டு. அதை பின்வரும் பக்கங்களில் காணலாம்.

இந்த SOFTWARE-ல் ஜோதிடர்களுக்கும், வாடிக்கை யாளர்களுக்கும், ஜோதிட ஆய்வாளர்களுக்கும், ஜோதிட மாணவர்களுக்கும், புதிதாக ஜோதிடத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கும் இந்த SOFTWARE சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.

இதை பற்றியான விளக்கங்கள் எங்களுடைய வகுப்பு, புத்தகம் மற்றும் **Website sulurgkastro.com** மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

## 3. Software பயன்படுத்த தேவையானவைகள்

## (System Requirements)

Software தடையின்றி பயன்படுத்த, உங்கள் சாதனம் கீழே கொடுக்கப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

### 3.1 இயங்கு தளம் (Operating System):

- **Android 6.0 (Marshmallow)** அல்லது அதற்கு மேற்பட்ட **Model**

## 3.2 இணைய இணைப்பு (Internet Connectivity):

- **Software** பயன்படுத்த **Internet** தேவைப்படுகிறது
- சேமிக்கப்பட்ட (Save) ஜாதகங்கள் மற்றும் **PDF** களைப் பார்வையிட **Internet** தேவை இல்லை. **(Offline)**ல் பார்த்துக்கொள்ளலாம்

## 3.3 சாதன விவரக்குறிப்புகள் (Device Specifications):

- குறைந்தபட்சம் **2GB RAM** (சிறந்த செயல்பாட்டிற்கு **4GB RAM** **பரிந்துரைக்கப்படுகிறது**)

- குறைந்தபட்சம் **100MB** காலியான சேமிப்பு (தரவு, PDF கோப்புகள் மற்றும் cache க்காக)

## 3.4 தேவையான அனுமதிகள் (Permissions Required):

- **சேமிப்பு அனுமதி - Storage Permission**


- **மைக்ரோஃபோன் அனுமதி - Microphone Permission**

- **இணைய அனுமதி - Internet Permission**

# 4. தொடங்குதல்

## 4.1 Sulur GK Software நிறுவுதல் (Software Install)

1. உங்கள் மொபைல் சாதனத்தில் கூகிள் பிளே ஸ்டோரைத் திறக்கவும். (Google Playstore)
2. "**Sulur GK Astro**" என்று தேடவும்.
3. Software பதிவிறக்க நிறுவு (Install) என்பதைத் தொடவும்.




4. நிறுவல் முடிந்ததும், பயன்பாட்டைத் தொடங்க திற (Open) என்பதைத் தொடவும்.

## 4.2 உள்நுழைதல் (Enter)

அனைத்து அம்சங்களையும் அணுக, நீங்கள் உங்கள் Sulur GK ஜோதிடக் கணக்கில் உள்நுழைய Enter வேண்டும்.

1. பயன்பாட்டைத் திறந்து உள்நுழைவு (Enter)
2. எங்களை தெர்டர்புகொண்டு Licence Key பெற்றுக்கொள்ளவும். **( 98426 50908 )**

3. உங்கள் பதிவுசெய்யப்பட்ட (Login) பட்டனை அழுத்தவும். மின்னஞ்சல் (E-Mail ID) மற்றும் உரிம விசையை (Licence Key Copy Past) செய்யவும்.







4. நீங்கள் Submit பட்டனை தொட்டவுடன் உங்களுடைய Mail-ID மற்றும் Licence Key சரியானதாக இருந்தால் Restart என்று கேட்கும்.
5. Restart பட்டனை ஒருமுறை தொடவும் APP பயன்பாட்டிற்கு வரும்.
6. **Restart** பட்டனை ஒருமுறை தொடுவதன் மூலம் அமைப்பு நிறைவு செய்யப்படும்.
7. APP மீண்டும் தொடங்கிய பிறகு, அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்டவுடன், APP தானாகவே **முகப்பு திரைக்கு (Home Screen)** மாற்றப்படும்.

# 5 முகப்புத் திரை கண்ணோட்டம்

## (Home Screen)

உள் நுழைந்ததும் (Enter) நீங்கள் Home Screen ஐ காண்பீர்கள். இது Sulur GK Astrology App இன் முக்கிய Dash Bord ஆகும். மேலே இடது பக்கத்தில் ஆப்பார் (App Bar) இருக்கும். இதில் உள்ள பயன்பாட்டை தெரிந்துகொள்ளலாம்.

### 5.1 (App Bar) ஆப் பார் அமைப்பு


முகப்பு திரையின் மேற்பகுதியில் உள்ள **ஆப் பார் (App Bar)** ஐ Open செய்தவுடன் Drawer Icon Open ஆகும்.




**ட்ராவர் ஐகான் (இடது) Tower Icon**

இதில் அறிமுகம், சேமிக்கப்பட்ட ஜாதகம், சேமிக்கப்பட்ட PDFகள், நகரத் தேடல், உரைக்கு உரை, (Voice Text), தொடர்பு, பயனர் விவரம் மற்றும் அமைப்புகள் (Settings) போன்ற அனைத்து வசதிகளையும் அணுகலாம்.

# 6 நிறுவுனர் அறிமுகம்




**Sulur Gk Astro Founder S.Gopalakrishnan** அவர்களைப் பற்றிய செய்திகளும் **Software** பற்றிய செய்திகளும் இதில் இருக்கும்

## 6.1 சேமிக்கப்பட்ட ஜாதகங்கள் (Saved Records)

சேமிக்கப்பட்ட ஜாதகங்கள் இந்த பக்கத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

சேமிக்கப்பட்ட ஜாதகத்தில் பிறந்த தேதி, மாதம், வருடம், நேரம், பிறந்த ஊர் இவற்றில் எதாவது தவறுகள் இருந்தால் **(Edit Option)** திருத்திக்கொள்ளும் வசதியும் கொடுக்கப்பட்டடுள்ளது. அதேபோல் **(Delete Option)** கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், App Bar-ல் தனியான **Cloud Backup** ஐகான் வழங்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வாடிக்கையாளர் தங்களுடைய முழு ஜாதக (Page)ஐ மொபைல் அல்லது PC அல்லது Google Drive போன்ற தங்களின் விருப்பமான cloud storage-இல் நேரடியாக **பாதுகாப்பாக backup எடுக்க முடியும்.**

இதனால், அனைத்து சேமிக்கப்பட்ட ஜாதகங்களும் பாதுகாப்பாகவும், எடுத்துச் செல்லக்கூடியதாகவும், எப்போது வேண்டுமானாலும் மீட்டெடுக்கக்கூடியதாகவும் இருக்கும்.

## 6.2 சேமிக்கப்பட்ட PDF கள்

இந்த PDFக்குள் 2 Option இருக்கும். ராசி மற்றும் GK இதில் நீங்கள் சேமித்து வைத்திருந்த ஜாதகத்தை மற்றவர்களுக்கு PDFஆக அனுப்பும் வசதியும், Print Out எடுக்கும் வசதியும் உள்ளது.

ஒரு பக்க ஜாதகம், நாடி, பாவ தொடர்புகள், திசாபுத்தி மற்றும் கோச்சாரம் இவை அனைத்தும் PDF ஆக மாற்றிக்கொள்ளலாம்.

## 6.3 நகர் தேடல்

SGK Astro App-ல் 40 **இலட்சத்திற்கும் மேற்பட்ட உலகளாவிய நகரங்கள்** உள்ளதால், வாடிக்கையாளர்ருக்கு மிகச் சிறந்த வசதியை வழங்குவதற்காக இந்த நகர் தேடல் பயன்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு நகரத்தின் **மாநிலம்** அல்லது **நாடு** குறித்து வாடிக்கையாளர் தெளிவில்லாமல் இருந்தால், நகரத்தின் பெயரை இங்கேத் தேடி எளிதாக கண்டுபிடிக்கலாம்.

வாடிக்கையாளர் ஒரு சொல் அல்லது நகரத்தின் பெயரை உள்ளிடும் போது,

- பொருந்தும் மற்றும் அதற்கு இணையான நகரப் பெயர்கள் கொண்ட சுத்தமான, scroll செய்யக்கூடிய பட்டியல் காணப்படும்
- ஒவ்வொரு நகரத்திற்கும் மிகச் சிறந்த மற்றும் பொருத்தமான முடிவுகள்காட்டப்படும்.

ஒரு நகரத்தைத் தேர்வு செய்ததும், உடனடியாக கீழ்கண்ட தகவல்கள் காணப்படும்:

- **நாடு**
- **மாநிலம்**
- **மாவட்டம்**

இதனால் வாடிக்கையாளர், **Birth Details** பகுதியில் நாடு → மாநிலம் → மாவட்டம் என்பதை எந்த குழப்பமும் இல்லாமல் தேர்வு செய்யலாம்.

## 6.4 பேச்சை உரையாக மாற்றுதல் (Speech to Text)

**Speech to Text** module மூலம் வாடிக்கையாளர் பேசும் வார்த்தைகளை நேரடியாக உரையாக மாற்றிக்கொள்ளலாம். மைக் (Microphone) ஐகானை தட்டியோ அல்லது நீண்ட நேரம் அழுத்தியோ, வாடிக்கையாளர் தமிழ் அல்லது ஆங்கிலம் மொழிகளில் பேசலாம்; தேர்ந்தெடுத்தமொழியை அடிப்படையாக கொண்டு, அப் (App) தானாகவே பேச்சை உரையாக மாற்றும்.

இந்த module-ல் இரண்டு தனி குறிப்புப் பகுதிகளாக வழங்கப்பட்டுள்ளன:

- ராசி குறிப்புகள் பகுதி
- நாடி குறிப்புகள் பகுதி

ஒவ்வொரு குறிப்புப் பகுதியும் தன்னிச்சையாக இயங்குகிறது மற்றும் தனித்தனியே PDF-களில் சேர்க்கப்படுகிறது:

- ராசி குறிப்புகள் → ஒற்றைப் பக்க ஜாதக PDF க்குள் கூடுதல் பக்கமாகச் சேர்க்கப்படும்.
- நாடி குறிப்புகள் → நாடி PDF- இல், அனைத்து நாடி கணக்குகளுடன் கூடுதல் பக்கமாக சேர்க்கப்படும்.

## 6.5 கூடுதல் வசதிகள்:

- **தானியங்கி சேமிப்பு** - பேச்சு முடிந்தவுடன், வாடிக்கையாளர் கைமுறையாக சேமிக்க வேண்டிய அவசியமின்றி, குறிப்புகள் தானாகவே சேமிக்கப்படும்.

## 6.6 தொடர்பு விவரங்கள் (Contacts)

நீங்கள் **Sulur GK Astro** அவர்களை தொடர்பு கொள்ள நினைத்தால் இந்த பகுதி (Page) மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## 6.7 Settings (அமைப்புகள்)

இந்த பகுதியில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றார்போல் மாற்றிக்கொள்ளும் வசதி கொடுக்கப்பட்டுள்ளது

- **App Language (மொழி அமைப்பு):**

- தற்போது **Tamil** மற்றும் **English** மொழி பயன்பாட்டில் உள்ளது.
- வாடிக்கையாளர் எளிதாக மொழியை மாற்றிக்கொள்ளலாம்.
- **தாய் பெயர் & தந்தை பெயர்** (விருப்பத்தேர்வு – வாடிக்கையாளர் Settings-ல் இந்த விருப்பத்தை ON செய்திருந்தால்
- மட்டுமே காணப்படும்)



## 6.8 அயனாம்சம் தேர்வு (Ayanamsa Selection)

வாடிக்கையாளர்கள் வழங்கப்பட்ட பட்டியலில் இருந்து தங்களுக்கு விருப்பமான அயனாம்சத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.



அமைப்புகள்
பொது
மொழி
தமிழ்
படிவ அமைப்புகள்
தாய் தந்தை பெயரைச் சேர்க்கவும்
அயனாம்சம்
Lahari
KP Old
Raman
Sayana
இடம்
, ,
PDF
SULUR GK ASTRO
சேமி

## 6.9 இடம்

உங்களுக்கு தேவையான ஊர் பெயரை தேர்வு செய்து சேமித்துக்கொள்ளவும். நீங்கள் App யை Open செய்தவுடன் நீங்கள் தேர்வு செய்த ஊர் வந்துவிடும்.

இந்த ஊர் நிரந்தரமாக இருக்கும்.

ஒவ்வொரு முறையும் இந்த இடத்திற்கு போய் நீங்கள் மாற்ற வேண்டியது இல்லை.




## 6.10 PDF Settings

வாடிக்கையாளர் தங்கள் **Logo** மற்றும் ஜோதிடரின் விவரங்கள் (E-mail), தொலைப்பேசி எண், முகவரி மற்றும்

பெயரை பதிவு செய்துகொள்ளலாம். இவை ஒரு பக்க ஜாதகம் மற்றும் நாடி PDF யில் தலைப்புப்பகுதியில் தானாக சேர்க்கப்படும்.

## 7 Main Form (Screenshot)

ஜாதக விவரங்களை இங்கு பதிவு செய்தவுடன் **Submit** செய்யவும்






## 7.1 அடிப்படை ஜாதக விவரங்கள்

முக்கிய படிவத்தை **(Main Form) Submit** செய்தவுடன், **App** தானாகவே கீழ்கண்ட தகவல்களை **ராசி Module**-இன் மேற்பகுதியில் காட்டும்:

- **பெயர்**
- **பிறந்த தேதி**
- **பிறந்த நேரம்**
- **அயனாம்சாம்**
- **நேர மண்டலம்**
- **பக்ஷம்**

- **பிறந்த நாள** 
- **பிறந்த இடம்**
- **ராசி**
- **நட்சத்திரம்**
- **லக்னம்**
- **லக்ன அதிபதி**
- **திதி**
- **யோகம்**
- **கரணம்**
- **அயனம்**
- **சூரியோதயம்**
- **சூரியஅஸ்தமனம்**

**அட்சரேகை & தீர்க்கரேகை**

இந்த விவரங்கள், வாடிக்கையாளர் உள்ளிட்ட பிறந்த தகவல்கள் துல்லியமாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்த உதவுகின்றன.

# 8 கிரக பாதசார அட்டவணை

← பஞ்சாங்கம்

ராசி நாடி

| கிரகம் | பாகை | நட்சத்திரம் |
|---|---|---|
| லக்கினம் | 05 - 13° 10' 30" | அஸ்தம் 1 |
| சூரியன் | 07 - 12° 58' 08" | அனுஷம் 3 |
| சந்திரன் | 02 - 17° 03' 50" | திருவாதிரை |
| செவ்வாய் | 03 - 16° 47' 27" | ஆயில்யம் 1 |
| புதன் | 08 - 03° 33' 57" | மூலம் 2 |
| குரு | 02 - 10° 34' 33" | திருவாதிரை |
| சுக்கிரன் | 06 - 29° 54' 21" | விசாகம் 3 |
| சனி | 04 - 06° 50' 59" | மகம் 3 |
| ராகு | 05 - 18° 45' 39" | அஸ்தம் 3 |
| கேது | 11 - 18° 45' 39" | ரேவதி 1 |
| மாந்தி | 02 - 18° 58' 08" | திருவாதிரை |
| ம்ரித்யு | 05 - 00° 58' 08" | உத்திரம் 2 |

விரிவான **பாதசார அட்டவணை** காட்டப்படும், இதில் அனைத்து கிரக நிலைகளும் துல்லியமான ஜோதிட விவரங்களுடன் பட்டியலிடப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு கிரகத்திற்கும் அட்டவணையில் கீழ்காணும் தகவல்கள் வழங்கப்படும்:

- **கிரகத்தின் பெயர்**
- **கிரகத்தின் டிகிரி**
- **நட்சத்திரம் - பாதம் எண்**
- **நட்சத்திர அதிபதி**

- **ராசி**

- **ராசி அதிபதி**
- இது பிறப்பின் போது கிரகங்கள் பாகை கலை விகலை பற்றிய அட்டவணை உள்ளது.

# 9 ராசி Module

வாடிக்கையாளர் முகப்பு திரையில் **Submit** பட்டனை தொட்ட பின்னர் முதலில் காட்டப்படும் முக்கியமான திரை ஜாதகரின் ராசி கட்டம் ஆகும்.

இந்த பகுதியில் அடிப்படை ஜாதக விவரங்கள், கிரக நிலைகள், ராசி நவாம்ச கட்டங்கள், தசா-புக்தி கணக்கீடுகள் ஆகிய அனைத்தும் **தெளிவாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவிலும்** வழங்கப்படுகின்றன.

## 9.1 ராசி மற்றும் நவாம்ச சக்கரங்கள்






இந்த செயலி, **தென்னிந்திய** மற்றும் **வட இந்திய** ஆகிய இரு சக்கர முறைகளையும் பயன்படுத்தலாம். வாடிக்கையாளர் Settings-இல் தேர்ந்தெடுத்த விருப்பத்தின் அடிப்படையில், ராசிகட்டங்கள் தானாகவே காட்டப்படும்.

**காணப்படும் சக்கரங்கள்:**

- **ராசி சக்கரம்**
- **நவாம்ச சக்கரம்**

## 9.2 சிறப்பம்சங்கள்:

- **தெளிவான மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்ட அமைப்பு** - 12 வீடுகளையும் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்தில் வழங்குகிறது, இது கிரக நிலைகளைப் படிக்கவும் விளக்கவும் எளிதாக்குகிறது.
- **துல்லியமான கிரக வரைபடம்** - ஒவ்வொரு கிரகம் மற்றும் வீட்டின் நிலையும் தேர்ந்தெடுக்கப்பட்ட

அயனாம்சத்தின் அடிப்படையில் துல்லியமாக கணக்கிடப்படுகிறது.

- **ராசி-நவாம்ச ஒப்பீடு எளிதாக்கம்**- வாடிக்கையாளர் இரண்டு விளக்கப்படங்களையும் எளிதாக ஒப்பிட்டுப் பார்க்க முடியும் கிரக வலிமை, மற்றும் நிலை மாற்றங்களை பகுப்பாய்வு செய்ய உதவுகிறது.

## 9.3 தசா - புத்தி விவரங்கள்

வாடிக்கையாளர் பிறந்த நேரத்திற்கான விம்ஷோத்தரி தசா/ புத்தி அட்டவணை பார்க்கமுடியும்.

**காண்பிக்கப்படும் முக்கிய விவரங்கள்**:

- **பிறந்த நேர இருப்பு தசா**:

  பிறக்கும் நேரத்தில் நடந்து கொண்டிருந்த தசாவின் பின்வரும் காலத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

- **தற்போது நடந்து கொண்டிருக்கும் தசா & புத்தி**: வாடிக்கையாளர் தற்போதைய வயதிற்கு ஏற்ப தசா மற்றும் புத்தியை துல்லியமாகக் காட்டுகிறது.

- **தொடக்கம் & முடிவு தேதிகள்** :
  ஒவ்வொரு தசா மற்றும் புத்திக்கும் தெளிவான ஆரம்ப மற்றும் இறுதி தேதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தசா புத்தி**

| | |
|---|---|
| இருப்பு தசா : | ராகு மகா தசா - 3 வருடம் 11 மா |
| நடப்பு தசா புத்தி : | புதன் தசா - ராகு புத்தி |
| ஆரம்ப தேதி : | 13.05.2026 |
| முடிவு தேதி : | 01.12.2028 |
| நடப்பு வயது: | 48 வருடம் 7 மாதம் 3 நாள் |

**தசா புத்தி அட்டவணை**

| | | |
|---|---|---|
| ராகு | சுக்கிரன் | 29.11.197 |
| ராகு | சூரியன் | 03.06.197 |
| ராகு | சந்திரன் | 27.04.197 |
| ராகு | செவ்வாய் | 28.10.198 |
| குரு | குரு | 15.11.198 |
| குரு | சனி | 03.01.198 |
| குரு | புதன் | 16.07.198 |
| குரு | கேது | 22.10.198 |
| குரு | சுக்கிரன் | 27.09.198 |
| குரு | சூரியன் | 28.05.199 |

- **தற்போதைய வயது**:
  வாடிக்கையாளர் தற்போதைய வயதைக் காட்டுவதன் மூலம், தசா-புத்தி சுழற்சியில் அவர்கள் எந்த நிலையில் உள்ளார்கள் என்பதை எளிதில் புரிந்துகொள்ள உதவுகிறது.

## 9.4 தசா-புத்தி-அந்தர அட்டவணை

தசா-புத்தி-அந்தர அட்டவணையில் பார்த்துகொள்ளலாம்




| D | B | தசா | புத்தி | முடிவு தேதி |
|---|---|---|---|---|
| ○ | ○ | புதன் | புதன் | 11.04.2019 |
| ○ | ○ | புதன் | கேது | 08.04.2020 |
| ○ | ○ | புதன் | சுக்கிரன் | 08.02.2023 |
| ◉ | ○ | புதன் | சூரியன் | 15.12.2023 |
| ○ | ○ | புதன் | சந்திரன் | 15.05.2025 |
| ○ | ○ | புதன் | செவ்வாய் | 12.05.2026 |
| ○ | ◉ | புதன் | ராகு | 30.11.2028 |
| ○ | ○ | புதன் | குரு | 08.03.2031 |
| ○ | ○ | புதன் | சனி | 14.11.2033 |

இந்த அட்டவணை தசா புத்திக்கு ஆரம்ப முடிவு தேதி பார்ப்பது போல், அந்தரத்திற்கும் ஆரம்ப முடிவு தேதி பார்த்துக்கொள்ளலாம்.

## 9.5 கோச்சார சக்கரம்

கோச்சார கட்டத்தில் தற்போதைய கிரக நிலைகளை தெளிவாகக் பார்த்துக்கொள்ளலாம்.

இது வாடிக்கையாளர்களுக்கு தற்போதைய கிரக இயக்கங்கள் மற்றும் அதன் தாக்கங்களை நடைமுறை பார்வையில் புரிந்துகொள்ள உதவுகிறது.




**GK** பகுதிக்கு சென்றவுடன் நீங்கள் நாடி மற்றும் பாரம்பரிய முறையில் பலன் பார்க்க ராசி கட்டம் மற்றும் அட்டவணைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் **SULUR GK ASTRO** கோட்பாட்டின் கணித முறைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

## 10 Sulur GK கோட்பாடுகள் அறிமுகம்


நாடி தொடர்புகள் மற்றும் பாவத்தில் கிரக தொடர்புகள்

இந்த பகுதியிலும் விளக்க கட்டங்களுடன் தகவல்கள் தரப்படும்.




- ராசி கட்டத்தின் மேலே கோட்சாரம் தேர்வு செய்தால் **PLACIDUS** கோட்சாரம் **PLACIDUS** முறையை காட்டும் வெளிகட்டத்தில்.
- பிறப்பு **PLACIDUS** தேர்வு செய்த பின்பு உள் கட்டத்தில் 12 பாவங்கள் **PLACIDUS** முறையை காட்டும்.

## 10.1. ராசி கட்டம் கோட்சார கிரகம்




ராசி கட்டத்தில் உள்ள கிரகம், பாவம் மற்றும் கோச்சார கிரகம் மற்றும் பாவம், பாகை, கலை வாரியாக தரப்பட்டுள்ளது.

இந்த பகுதி மிகமிக முக்கியமான பகுதியாக பார்க்கப்படுகிறது. ராசி கட்டத்தையும் கோச்சாரத்தையும் நீங்கள் பார்த்தவுடன் கடந்த கால நிகழ்கால, எதிர்கால, நிகழ்வுகளை சிந்திக்க உதவும் பகுதியாக உள்ளது. நீங்கள் கற்றுக்கொண்ட Sulur

Gk கோட்பாடுகளை இந்த ராசி கட்டத்தை பார்த்தவுடன் பலன்களை எளிமையாக சொல்ல சிந்தித்துவிடுவீர்கள்.

## 10.2. பரிவர்த்தனை இருந்தால் பரிவர்த்தனை கிரகங்களை அட்டவணையாக காட்டும்.

**பரிவர்த்தனை கிரகங்கள்**

| | | |
|---|---|---|
| குரு# | <-> | பு |

## 10.3 பரிவர்த்தனைக்கு முன்

**பரிவர்த்தனைக்கு** (●) முன் ( ) பின்

**பிறந்தகால 12 பாவ புள்ளிகளைப் பிறந்தகால கிரகங்கள் தொடர்பு கொள்ளக் கூடிய பாவ அட்டவணை**

B 1-5-7-9 | **B 1-5-9**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | ராகு | சனி-3 | குரு# | |
| 02 | சந் | செவ்-4 | சுக் | சூ |
| 03 | செவ் | கேது | பு | சனி |
| 04 | சந்-7 | | | |
| 05 | செவ்-7 | ராகு | சனி-7 | குரு# |
| 06 | சந் | செவ்-8 | சுக் | சூ |
| 07 | செவ் | கேது | பு | சனி |
| 08 | சுக்-7 | சனி-10 | சூ-7 | |
| 09 | ராகு | பு-7 | குரு# | |
| 10 | சந் | சுக் | சூ | |
| 11 | செவ் | கேது | பு | சனி |
| 12 | | | | |

பரிவர்த்தனை இருந்தால் பரிவர்த்தனைக்கு முன்பு அல்லது பின்பு எதை தேர்வு செய்கிறோமோ அதன் அடிப்படையில் கிரகங்கள் 12 பாவங்களை தொடர்பு கொள்வதை அட்டவணையாக காட்டும்.

## 10.4 பரிவர்த்தனைக்கு பின்

பரிவர்த்தனைக்கு ○ முன் ◉ பின்

**பிறந்தகால 12 பாவ புள்ளிகளைப் பிறந்தகால கிரகங்கள் தொடர்பு கொள்ளக் கூடிய பாவ அட்டவணை**

B 1-5-7-9 | B 1-5-9

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | ராகு | சனி-3 | பு# | |
| 02 | சந் | செவ்-4 | சுக் | சூ |
| 03 | செவ் | கேது | குரு | சனி |
| 04 | சந்-7 | | | |
| 05 | செவ்-7 | ராகு | சனி-7 | பு# |
| 06 | சந் | செவ்-8 | சுக் | சூ |
| 07 | செவ் | கேது | குரு | சனி |
| 08 | சுக்-7 | சனி-10 | சூ-7 | |
| 09 | ராகு | குரு-7 | பு# | |
| 10 | சந் | சுக் | சூ | |
| 11 | செவ் | கேது | குரு | சனி |
| 12 | | | | |

# 11 பாவம், நாடி கிரக தொடர்பு விளக்கம்

பிறந்த கால ஜாதகத்தில் 12 பாவப்புள்ளிகளை பிறந்த கால கிரகங்கள் 1,5,7,9 என்கிற கோட்பாட்டின்படி தொடர்பு கொள்கிறது மற்றும் கிரகங்கள் பார்வையின் மூலமும் தொடர்புகொள்கிறது.

1,5,9 என்கிற தொடர்புகளையும் பார்த்துக்கொள்ளலாம்.

பரிவர்த்தனைக்கு ○ முன் ◉ பின்

**பிறந்தகால 12 பாவ புள்ளிகளைப் பிறந்தகால கிரகங்கள் தொடர்பு கொள்ளக் கூடிய பாவ அட்டவணை**

B 1-5-7-9 | B 1-5-9

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | ராகு | சனி-3 | பு# | |
| 02 | சந் | செவ்-4 | சுக் | சூ |
| 03 | செவ் | கேது | குரு | சனி |
| 04 | சந்-7 | | | |
| 05 | செவ்-7 | ராகு | சனி-7 | பு# |
| 06 | சந் | செவ்-8 | சுக் | சூ |
| 07 | செவ் | கேது | குரு | சனி |
| 08 | சுக்-7 | சனி-10 | சூ-7 | |
| 09 | ராகு | குரு-7 | பு# | |
| 10 | சந் | சுக் | சூ | |
| 11 | செவ் | கேது | குரு | சனி |
| 12 | | | | |

இந்த அட்டவணை பரிவர்த்தனைக்கு பின்பு கிரகங்கள் பாவத்தை தொடர்பு கொள்ளும் அட்டவணை.

12 பாவ புள்ளிகளை கிரகங்கள் தொடர்புகொள்வதை இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட

பாவத்திற்கு 1,5,7,9 ஆவாது பாவங்களில் உள்ள கிரகங்கள் பாகை வாரியாக குறிப்பிட்ட பாவத்தை தொடர்பு கொள்ளும். ஒரு குறிப்பிட்ட பாவத்தை செவ்வாய் சனி பார்வையால் தொடர்பு கொண்டாலும் அதையும் கிரக தொடர்பாக எடுத்துக்கொள்ளும்.

ஒவ்வொரு பாவத்திற்கும் கிரகங்கள் தொடர்பு கொண்டுள்ளதை வைத்து அதன் ராசி, கிரகம், ஆதிபத்தியம் காரகத்துவத்தை பயன்படுத்தி பலன்களை எளிமையாக பார்த்துக்கொள்ளலாம்.

## 11.1. கிரகம்

1. நாடி அட்டவணையில் பிறந்தகால 9 கிரகங்களை பிறந்தகால கிரகங்கள் 1,5,7,9 என்கிற கோட்பாட்டின் படி தொடர்புகொள்ளும். பிறந்தகால கிரகங்களை செவ்வாய், சனி பார்வையால் ஏற்படும் தொடர்புகளையும் இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

1,5,9 மற்றும் 1,4,7,10 என்கிற கோட்பாட்டின் அடிப்படையில் தொடர்புகளை அட்டவணையில் பார்த்துக்கொள்ளலாம்.

கிரக இணைவுகளை வைத்து பார்க்கப்படும் ஜோதிடத்தை நாடி ஜோதிடம் என்கிறோம். தமிழ்நாடு மட்டுமில்லாமல் பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலும் இந்த நாடி ஜோதிடம் பார்க்கப்பட்டுவருகிறது. இது பலன்பார்க்க மிக எளிமையான ஒருமுறை ஆகும்.


மனித வாழ்க்கையில் ஏற்படும் சுக துக்கங்களை இந்த கிரக இணைவுகளை வைத்து பலன் பார்த்துக்கொள்ளலாம்.




| | | | | |
|---|---|---|---|---|
| சூரி | செவ் | கேது | குரு | சனி |
| சந் | சுக் | சூ | செவ் | |
| செவ் | கேது | குரு | சனி | |
| பு | குரு-7 | ராகு | சூ-7 | |
| குரு | சனி | பு#-7 | சந்-7 | |
| சுக் | சூ | செவ் | கேது | |
| சனி | | | | |
| ராகு | | | | |
| கேது | செவ் | சூ | சுக் | |

**2.** பாவத் தொடர்புகள் மற்றும் நாடி கிரக தொடர்புகள் பாகை கலை, விகலை வாரியாக கிரகங்களை தொடர்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**3.** 12 பாவங்களில் கிரகங்கள் 12 பாவ புள்ளிக்கு அருகாமையில் உள்ளதா அல்லது தூரத்தில் உள்ளதா என்பதை Percentage அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. கிரக பார்வையால் ஏற்படும் தொடர்பும் இதேபோல உள்ளது.




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | ராகு | 81.58 | சனி-3 | 19.05 | பு | 7.14 |
| 02 | சந் | 85.07 | செவ்-4 | 84.46 | சுக் | 45.5 |
| 03 | செவ் | 84.46 | கேது | 81.58 | குரு# | 31.2 |
| 04 | சந்-7 | 85.07 | | | | |
| 05 | செவ்-7 | 84.46 | ராகு | 81.58 | சனி-7 | 19.05 |
| 06 | சந் | 85.07 | செவ்-8 | 84.46 | சுக் | 45.5 |
| 07 | செவ் | 84.46 | கேது | 81.58 | குரு# | 31.2 |
| 08 | சுக்-7 | 45.5 | சனி-10 | 19.05 | சூ-7 | 2.05 |
| 09 | ராகு | 81.58 | குரு#-7 | 31.2 | பு | 7.14 |
| 10 | சந் | 85.07 | சுக் | 45.5 | சூ | 2.05 |
| 11 | செவ் | 84.46 | கேது | 81.58 | குரு# | 31.2 |
| 12 | | | | | | |



**4.** பிறந்த கால ஜாதகத்தில் உள்ள 9 கிரகம் நின்ற பாகைக்கு தொடர்பு கொள்ளும் கிரகம் அருகாமையில் உள்ளதா அல்லது தூரத்தில் உள்ளதா என்பதை கிரகத்தின் Percentage அடிப்படையில் பார்க்கும் அட்டவணை உள்ளது.

**5.** Percentage என்ற பட்டனை தொட்டவுடன் 12 பாவ அட்டவணை மற்றும் நாடி அட்டவணையில் Percentage பார்த்துக்கொள்ளலாம்.

# 12 சேர்க்கைகள்

1. ஒரு கிரகம் நின்ற பாகை, கலை, விகலைக்கு பின்பு உள்ள 1 டிகிரி வரை உள்ள கிரகங்கள் கிரக சேர்க்கையில் வரும்.

2. 1,5,7,9 என்கிற ராசியிலும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் செவ்வாய், சனி சிறப்பு பார்வையிலும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

   கிரகம் வக்கரமாக இருந்தாலும் தொடர்பு எடுத்துக்கொள்ள வேண்டும்.

3. இந்த உதாரண ஜாதகத்தில் சூரியனுக்கு குருவும், சுக்கிரனுக்கு செவ்வாயும் சேர்க்கை வந்துள்ளது.

ராசி நாடி

**பிறந்த கால கிரகங்கள் Conjunction**

| | | | | |
|---|---|---|---|---|
| சூரி | குரு | | | |
| சந் | | | | |
| செவ் | | | | |
| பு | | | | |
| குரு | | | | |
| சுக் | செவ் | | | |
| சனி | | | | |
| ராகு | | | | |
| கேது | | | | |

4. ஒரு கிரகம் நின்ற வீட்டில் நின்ற பாகை, கலையில் இருந்து 1,5,7,9 வது ராசியில் உள்ள மற்ற கிரகங்கள் இருந்தால், பாகை வாரியாக தொடர்புகொள்ளும். அப்படி தொடர்புகொள்ளும்போது தான்நின்ற பாகை கலைக்கு 1° குறைவாக உள்ள கிரகங்களை இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

5. இந்த அட்டவணை போல் கிரக சேர்க்கை வந்தால் பலன் பார்க்க மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

6. இந்த கிரகதொடர்புகள் நடைமுறையில் தொடர்புபெற்ற கிரகத்தின் காரகத்துவம் பலன்களாக உள்ளனவா என்று முடிவு செய்தபின்பு பலன் சொல்ல வேண்டும்.

7. பலன் பார்க்கும் போது கிரக காரகத்துவம் பலன்கள் நடைமுறையில் இருந்தால் இந்த கிரகத்தை கிரகதொடர்பில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

8. சூரியன் 22.2 பாகை, குரு 21.06 பாகை குறைவாக உள்ளது. பலன் சொல்லும் பொது சூரியனுக்கு குரு தொடர்பு உள்ளதா என்று காரகத்துவம் மூலம் பலன் பார்த்துக்கொள்ளவேண்டும்.

9. சுக்கிரன் நின்ற பாகை, கலை, விகலைக்கு பின்பு அதாவது 1°டிகிரி குறைவாக இருக்கும் கிரகம் சுக்கிரனுக்கு சேர்க்கை ஏற்படும்.

இந்த ஜாதகத்தில் செவ்வாய் 1° இருப்பதால் சுக்கிரன் செவ்வாய் சேர்க்கை ஏற்ப்பட்டுள்ளது. செவ்வாயின் குணம் சுக்கிரனிடம் இருந்தால் செவ்வாயின் குணம் உள்ளது போல் எடுத்துக்கொள்ளவேண்டும்.

## 13. விம்ஷொத்திரி தசா புத்தி அந்தரம் அட்டவணை

1. இந்த முறை விம்ஷொத்திரி தசா புத்தி முறையாகும்.

தசா | ✓ புத்தி | அந்தரம்

| D | B | தசா | புத்தி | முடிவு தேதி |
|---|---|---|---|---|
| ○ | ○ | புதன் | புதன் | 11.04.2019 |
| ○ | ○ | புதன் | கேது | 08.04.2020 |
| ○ | ○ | புதன் | சுக்கிரன் | 08.02.2023 |
| ◉ | ○ | புதன் | சூரியன் | 15.12.2023 |
| ○ | ○ | புதன் | சந்திரன் | 15.05.2025 |
| ○ | ○ | புதன் | செவ்வாய் | 12.05.2026 |
| ○ | ◉ | புதன் | ராகு | 30.11.2028 |
| ○ | ○ | புதன் | குரு | 08.03.2031 |
| ○ | ○ | புதன் | சனி | 14.11.2033 |

2. தசாவை கிளிக் செய்தால் ஒவ்வொரு தசையும் முடியும் நாள் ஜாதகரின் வயது அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளது.

3. புத்தியை கிளிக் செய்தால் நடக்கும் தசாவின் 9 புத்திகள் எப்பொழுது முடியும் நாள்களை பார்க்கும் அமைப்பு உள்ளது.

4. அந்தரத்தை கிளிக் செய்தால் தசா, புத்தி அந்தரம் பார்க்கும் வசதி கொடுக்கப்பட்டுள்ளது. அந்தரம் எந்த தேதியில் ஆரம்பித்து எந்த தேதியில் முடியும் என்கிற தேதி உள்ளது.

## 14. பார்வைகள்

1. இது SULUR GK SCHOOL OF ASTROLOGY-ன் மிக முக்கியமான பகுதி இது. பிறந்தகால ஜாதகத்திற்கும் மற்றும் கோச்சாரத்தில் சனி, செவ்வாய் எந்த நட்சத்திர பாதத்தை பார்வையால் பார்க்கின்றன என்பதை இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.




2. சனி மற்றும் செவ்வாயின் சிறப்பு நாடி விதிபடி பார்வைகளுக்கு அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

Aspects

| கிரகம் | பரிவர்த்தனைக்கு முன் | பரிவர்த்தனைக்கு பின் |
|---|---|---|
| சனி 3 | சித்திரை 3 - 2° 32' 6" | பரணி 2 - 16° 45' 43" |
| சனி 7 | அவிட்டம் 3 - 2° 32' 6" | பூரம் 2 - 16° 45' 43" |
| சனி 10 | கார்த்திகை 2 - 2° 32' 6" | கேட்டை 1 - 16° 45' 43" |
| செவ் 4 | சித்திரை 2 - 28° 43' 51" | சித்திரை 2 - 28° 43' 51" |
| செவ் 7 | உத்திராடம் 1 - 28° 43' 51" | உத்திராடம் 1 - 28° 43' 51" |
| செவ் 8 | அவிட்டம் 2 - 28° 43' 51" | அவிட்டம் 2 - 28° 43' 51" |

**3.** சனியின் 3,10 ஆம் பார்வை செவ்வாயின் 4,8 ஆம் பார்வைகள் பரிவர்த்தனைக்கு முன்பு பரிவர்த்தனைக்கு பின்பு 2 அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளது.

Aspects

| கிரகம் | பரிவர்த்தனைக்கு முன் | பரிவர்த்தனைக்கு பின் |
|---|---|---|
| சனி 3 | ரேவதி 4 - 0° 0' 0" | பரணி 4 - 23° 24' 7" |
| சனி 7 | ரேவதி 4 - 0° 0' 0" | பூரம் 2 - 16° 45' 43" |
| சனி 10 | ரேவதி 4 - 0° 0' 0" | கேட்டை 3 - 24° 22' 19" |
| செவ் 4 | ரேவதி 4 - 0° 0' 0" | சித்திரை 3 - 0° 24' 28" |
| செவ் 7 | ரேவதி 4 - 0° 0' 0" | உத்திராடம் 1 - 28° 43' 51" |
| செவ் 8 | ரேவதி 4 - 0° 0' 0" | அவிட்டம் 1 - 26° 4' 4" |

**4.** உதாரண ராசி கட்டத்தில் சனி சிம்ம ராசியில் 2 பாகை 32. கலையில் உள்ளது. மகம் 2ம் பாதம் இந்த சனி 3 ஆம் பார்வையாக நாடி விதிப்படி துலா ராசியில் சித்திரை நட்சத்திரம் 3ஆம் பாதத்தை பார்க்கும்.

5. துலா ராசியில் உள்ள 2 பாகை 32. கலை சனியின் பார்வையால் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.

6. இந்த நட்சத்திர பாதத்தில் வேறு கிரகம் இருந்தாலும் அல்லது கோட்சார கிரகம் இந்த பகுதியை கடக்கும் போதும் அதன் கிரக காகரகதுவம் பாவ ஆதிபத்திய காரகத்துவம் மிகமிக கடுமையாக பாதிக்கப்படுவதை நீங்கள் உணரலாம்.


7. இதன் முழு விளக்கம் நாடி ஜோதிட புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. பார்வைகள் மிகவும் நுட்பமாக கவனிக்கப்படவேண்டும். இந்த அட்டவணையில் பாவ அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளது. எங்களுடைய இணையதளத்தில் இதன் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது

இதை போல சனியின் 10ம் பார்வையும் செவ்வாயின் 4,8 பார்வைகளையும் கவனமாக பார்த்துகொள்ள வேண்டும்.

## 15. கோச்சாரம்

1. கோச்சாரம் என்கிற வட்டத்தை கிளிக் செய்தவுடன் புதிய Screen Open ஆகும். அதில் பிறந்த கால 12 பாவப்புள்ளிகளுக்கு கோச்சார கிரகம் தொடர்புகொள்ளும் அட்டவணை இருக்கும்.

2. நாடி விதிபடி கோச்சார கிரகம் பிறந்தகால கிரகங்களை தொடர்புகொள்ளும் அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் நீங்கள் கனிக்கும் ஜாதகத்தை அன்றைய கோச்சாரத்தை வைத்து நிகழ்கால பலன்களை பார்க்க உதவியாக இருக்கும் அட்டவணை ஆகும்.




3. கோச்சார பகுதியில் ராசிகட்டத்திற்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் தேதி, நேரம், நாடு, மாநிலம், ஊர் இருக்கும். எதிர்காலத்தில் முகூர்த்தம் குறிக்க (அ) இடம் வாங்க, திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு நீங்கள் நல்ல நாள் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் அந்த சம்பவம் எந்த நாட்டில், மாநிலத்தில் நடக்கிறதோ அந்த இடத்தை தேர்ந்தெடுத்து Submit தந்தால் மீண்டும் நாடி Page Open ஆகும். கோச்சார பட்டணை கிளிக் செய்த பின்பு நீங்கள் எந்த தேதி, மாதம், வருடம் தந்திருப்பார்களோ அந்த நாட்களின் பாவத்தொடர்பு, கிரக தொடர்பு தெரியும் நீங்கள் அதை சாதகமாக இருக்கிறதா

அல்லது பாதகமாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளலாம்.

## 16. சந்திர நாடி தேதி

1. கோச்சார சந்திரன் பிறந்த கால கிரகங்களை எப்போழுது தொடர்புகொள்கின்றன என்கிற அட்டவணை நீங்கள் கொடுக்கும் தேதியிலிருந்து 20 நாள்வரை சந்திரன் தொடர்பு கொள்ளும் நாட்களை பார்த்துகொள்ளலாம்.

2. தேதி என்கிற பட்டணை கிளிக் செய்த உடன் ஒரு Page Open ஆகும். Select Date Find என்று இருக்கும். மேலே தேதி 20 நாட்களுக்குள் தேர்வு செய்யவும். Find என்ற பட்டணை கிளிக் செய்து 30 Second காத்திருக்குவும் புதிய ஒரு அட்டவணையில் கோச்சார சந்திரன் நாட்கள் வாரியாக, மணி வாரியாக எந்த கிரகத்தை தொடர்புகொள்கிறது என்பதை காட்டும். இந்த அட்டவணை அன்றைய நாள் நன்மையா, தீமையா என்று முன்கூட்டியே பார்த்துகொள்ளலாம்.

## 17. கோச்சாரம் ராசிக்கட்டம்

நாம் ஜாதகம் பார்க்கும் நாளின் கோச்சார ராசிக்கட்டம் 12 பாவங்கள் கிரக தொடர்பு அட்டவணை மற்றும் 9 கிரகம் தொடர்பு கொள்ளும் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. இது அன்றைய நாளின் கோச்சார தொடர்புகள் இது சில நேரங்களில் பிறந்த கால

ஜாதக இணைவு கோச்சார கிரக இணைவு ஒரே மாதிரியாக இருந்தால் அதன் காரகத்துவம் அதிகமாக வெளிப்படும்.

இந்த பகுதி மிகமிக முக்கியமான பகுதி அதனால் ஒரு Screen-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பிறக்கும்போது ஜாதகத்தில் ஒருவருக்கு சனி, சூரியன் இருந்தால் கோச்சாரத்தில் சனி, சூரியன் சேர்க்கை வரும்போது அந்த குறிப்பிட்ட கால கோச்சார நிகழ்வு ஜாதகருக்கு கிரக காரகத்துவம் பாவஆதிபத்திய காரகத்துவம் வெளிப்படுத்தும்

Percentage அட்டவணை இரண்டு விதமாக கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டும் ஒன்றுதான் Percentage மற்றும் Chart எதை வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

